بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 03.04.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

---

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட் மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு நாள் சில அன்பர்களுடன் வெளியே நடக்க சென்றார்கள். வழியில் அல்லாஹ் தஆலாவுடைய உதவிகள் மற்றும் அருள்கள் பற்றி பேச்சு வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட் மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ் தஆலா உண்மையின் பிரதிபலிப்பாக இந்த இயக்கத்திற்கு ஆதரவாக எந்த அளவிற்கு அதிகமாக அழுத்தம் தருகிறான் என்றால் அதற்குப்பிறகும் கூட இம்மக்களது கண்கள் திறக்கவில்லை என்று கூறினார்கள்.

அன்னார் கூறினார்கள். ஒரு எதிரி எனக்கு கடிதம் எழுதியுள்ளார். உங்களை எதிர்ப்பதில் மக்கள் கொஞ்சமும் குறை வைக்கவில்லை. ஆனால் ஒரு விஷயத்துக்கு தான் எங்களுக்கு விடை கிடைக்கவில்லை. இவ்வளவு எதிர்ப்புகள் இருந்தும் நீங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் வெற்றி பெற்றுக் கொண்டே செல்கின்றீர்கள்.

இது அல்லாஹ் தஆலாவுடைய வாக்குறுதியாகும். அதன் விளைவு வெளிப்பட்டது. அப்போதும் மட்டுமல்ல. இன்று வரை எதிரிகள் தமது ஆவேசத்தை காட்டிக் கொண்டு தான் இருக்கின்றனர். ஆனால் இயக்கம் அல்லாஹ்வின் அருளால் வளர்ந்து கொண்டே இருக்கிறது. உலகில் எந்தப் பகுதியிலும் எதிரிகள் அஹ்மதிகளை அமுக்கவோ முடிவுக்கு கொண்டு வரவோ முயன்றால் அல்லாஹ் தஆலா அந்நாடுகளில் அஹ்மதிகளின் தியாகத்தின் தரத்தை உயர்த்துகிறான். அதே வேளையில் உலகில் மற்ற இடங்களில் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான வழிகள் திறந்தன. அப்பகுதிகல் நாம் முயற்சி செய்து திறக்க முடியாத இடங்களாகவும் மற்றும் ஒருபோதும் வெற்றியும் பெற முடியாத இடங்களாகவும் அவை இருந்தன. அஹ்மதிய்யத் அல்லாஹ் தஆலா தனது கைகளால் நாட்டிய செடி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அல்லாஹ்தஆலாவுடைய வாக்குறுதிக்கேற்ப அது வளர உள்ளது. மலரவுள்ளது. இன்ஷா அல்லாஹ்.

இப்போது நான் அல்லாஹ்வுடைய சில அருள்களை எவ்வாறு வழங்குகின்றான் என்று விளக்கும் சம்பவங்கள், எவ்வாறு மக்களின் உள்ளங்களை திறக்கிறான் என்று. எவ்வாறு மக்களிடம் செய்திகளை கொண்டு சேர்க்கின்றான் என்றும் விளக்கும் சில சம்பவங்களை எடுத்து வைப்பேன்.

நமது நைஜரின் முபல்லிக் எழுதுகிறார். ஒரு தப்லீக் பயணத்தின் போது ஒரு சீரற்ற பாதையை பிடித்தோம். அங்கு தப்லீக் செய்தவாறு முன்னே சென்றோம். 3 நாட்களுக்குபிறகு அதே பாதையில் திரும்பிய போது ஓரிடத்தை கடந்த போது மக்கள் எங்களை நிறுத்தினர். நாங்கள் அனைவரும் நீங்கள் திரும்பவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். நீங்கள் இப்போதே இமாம் சாஹிபிடம் வாருங்கள் என்றனர். அந்த இமாமிடம் சென்ற போது இமாம் சாஹிப் அவர்கள், அல்லாஹ் தஆலா எங்களுக்கு மனநிறைவை ஏற்படச் செய்து விட்டான். எனவே ஜமாஅத்தின் உண்மையின் மீது எங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை என்றார்.

அல்லாஹ் எவ்வாறு அவர்களுக்கு மன நிறைவை தந்தான் என்ற சம்பவம் இவ்வாறு கூறினார்கள். நீங்கள் இங்கிருந்து சென்ற பிறகு எங்களது நகரின் வஹ்ஹாபி இமாம் ஒரு குழுவுடன் இங்கு வந்தார். அஹ்மதிகள் காஃபிர்கள். நீங்கள் காஃபிர்களை ஏன் ஊரில் நுழைய விட்டீர்கள். தப்லீக் செய்ய ஏன் அனுமதித்தீர்கள் ? என்று கேட்டார்.

ஊரின் இமாம் சாஹிப் கூறினார். ஒரே ஒரு வித்தியாசம் தான் உங்களுக்கும் அஹ்மதிகளுக்கும் இடையில் உள்ளது. நீங்கள் இங்கு வந்ததில் இருந்து காஃபிர் என்பதை தவிர வேறு எதுவும் கூறவில்லை. அஹ்மதிகள் இங்கு இருக்கும் வரை திருக்குர்ஆன் மற்றும் ஹதீதைத் தவிர வேறு எதையும் கூறவில்லை. அஹ்மதிகளின் இந்த விஷயம் தான் குஃப்ர் என்றால் அவர்களது அந்த குஃப்ர் எங்களுக்கு பிடித்தது தான். நாங்களும் அத்தகைய காஃபிர் ஆகவே விரும்புகின்றோம். அங்கு பைஅத்துகள் நடைபெற்றன. மேலும் அல்லாஹ்வின் அருளால் அங்கு ஒரு பெரும் ஜமாஅத் உருவாகி விட்டது.

பிறகு தன்ஸானிய்யாவிலிருந்து டபோராவின் முபல்லிக் எழுதுகிறார். அங்கு ஒரு பெரும் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டது. அந்த ஜமாஅத் டபோரா நகரத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அங்கு நமது ஜமாஅத் நண்பர் சுலைமான் ஜுமுஆ சாஹிப் மூலமாக ஜமாஅத் நிறுவப்பட்டது. அவர் தப்லீக்கிற்காக செல்வார். அப்போது பிரசுரம் விநியோகித்து வந்தார். ஆனால் சிலர் பைஅத் செய்தனர். அதற்குப் பிறகு ஜமாஅத்தின் முஅல்லிம் அங்கு மீண்டும் மீண்டும் சென்று தப்லீக் செய்ததில் இன்னும் சிலர் பைஅத் செய்தனர். இப்போது அல்லாஹ்வின் அருளால் அங்கு எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே செல்கிறது. ஜமாஅத் அன்பர்கள் ஏழைகள். எனினும் ஈமானிய உணர்வில் அவர்களது முயற்சியால் அங்குள்ள சூழ்நிலைக்கேற்ப ஒரு சுமாரான பள்ளி உருவாகியது. அவர்கள் அனைவரும் சந்தா அமைப்பிலும் இணைந்துள்ளனர்.

இது போன்று மாலியின் அமீர் சாஹிப் எழுதுகிறார். ஒரு பெரிய இமாம் ஆதம் தன்காரா சாஹிப் பைஅத் செய்தார். அவர் பைஅத் செய்தவாறு கூறினார். நீண்ட காலமாக ஜமாஅத்தின் கேசட்டுகள், ரேடியோ ஆகியவற்றை கேட்டுக் கொண்டிருந்தாராம். மாலியில் அல்லாஹ்வின் அருளால் நமது கணிசமான ரேடியோ ஸ்டேஷன்கள் உள்ளன. FM ரேடியோ ஸ்டேஷன் உள்ளது. ஒவ்வொன்றின் வட்டமும் 70 – 80 கிலோ மீட்டர் சுற்றளவு வரை கேட்கும். கணிசமான அளவில் பரவியுள்ளது. பரந்த வட்டத்தில் இப்பணி நடக்கிறது. கூறுகிறார். ஆதம் சாஹிப் என்ற அம்மனிதர் திஜானியா பிரிவின் இமாமாக இருந்தவர். அவரது தந்தையார் அப்பகுதியில் 93 இணை வைப்பவர்களின் ஊரை முஸ்லிமாக்கி இருந்தார். ஓர் இரவில் ஆதம் சாஹிப் கனவில் கண்டார். அவரது தந்தையார் மகனைப் பார்த்துக் கூறினார். அஹ்மதிய்யத் ஒரு உண்மையான வழி. அஹ்மதிய்யத்தின் தூதை பரப்ப அதிகமாக முயற்சி செய். அதற்குப் பிறகு நமது முஅல்லிம் சாஹிபுடன்

தப்லீக்கிற்காக ஓர் ஊருக்கு சென்றார். அவ்வூர் மக்கள் முதலில் இணை வைப்பவர்களாக இருந்தனர். அவரது தந்தையார் மூலமாக முஸ்லிம் ஆனவர்கள். அந்த ஊரின் இமாமுக்கு இப்போது வயது 87. ஆதம் சாஹிபின் தந்தைக்கு ஆழமான நண்பராக இருந்தார். அந்த இரவில் அவர் தப்லீக் செய்தார். அல்லாஹ்வின் அருளால் அங்கு 3400 பைஅத்கள் நடந்தன.

பிறகு மாலியின் ரீஜியன் ஜிமானில் இருந்து முஅல்லிம் சாஹிப் எழுதுகிறார். ஒரு நாள் எங்கள் ரீஜியனின் ஓர் அஹ்மதி அப்துஸ் ஸலாம் தராவடே சாஹிப் அருகில் உள்ள கிராமத்துக்கு சென்ற போது அங்குள்ள கிராமவாசிகள் கூறினர். நீண்ட காலமாக இங்கு மழை பெய்யவில்லை. உங்கள் ஜமாஅத்து தான் உண்மையான ஜமாஅத் என்றால் நீங்கள் மழைக்காக துஆ செய்யுங்கள்.

அல்லாஹ்வே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைக்கான அடையாளத்தை காட்டுவாயாக என்று முஅல்லிம் சாஹிப் துஆ செய்தார்கள். இந்த முஅல்லிம் அந்த ஊரைச் சார்ந்தவர். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட் மஸீஹ் (அலை) அவர்களுடைய உண்மைக்கு அடையாளம் காட்டுமாறு துஆ செய்தார். இந்த துஆவுக்குப் பிறகு மேகம் திரண்டது. எல்லா பக்கமும் தண்ணீர் தேங்குமளவுக்கு கடும் மழை பொழிந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு மக்கள் அப்துஸ் ஸலாம் சாஹிபிடம் வந்தனர். அஹ்மதிய்யா ஜமாஅத் உண்மையிலேயே சத்தியமான ஜமாஅத் ஆகும். இறை ஜமாஅத் ஆகும் என்று எங்களுக்கு விளங்கி விட்டது என்று கூறி முழு ஊரும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தது.

நமது கானாவின் முபல்லிக் அவர்கள் தற்போது வஃபாத் ஆகிவிட்டார். அவர் தனது ஒரு சம்பவத்தை எழுதியுள்ளார். ஓரிடத்தில் நமது தாயி இலல்லாஹ் (அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்) அப்துல்லாஹ் சாஹிபிடம் லாம்பூவா என்ற இடத்தின் மக்கள் தப்லீக்கின் போது மழைக்காக துஆ செய்யுமாறு கூறினர். உடனே அவர் அறிவித்தார். ஏனெனில் அவர் இமாம் மஹ்தியின் தூதுச் செய்தி அங்கு எடுத்து வைத்துள்ளார். அதனால் அவரது துஆ ஏற்கப்பட்டது. இரவில் மழை பெய்தது. அல்லாஹ்வின் அருளால் அப்பகுதியில் நல்ல மழை. அந்த துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதன் அடையாளத்தை பார்த்து அவ்விடத்தின் பெரும் அளவிலான மக்களுக்கு அஹ்மதிய்யதை ஏற்கும் வாய்ப்பு கிடைத்தது.

பிறகு ஐவரிகோஸ்டின் அமீர் சாஹிப் எழுதுகிறார். ஒரு புதிதாக பைஅத் செய்த பெண்ணான பாத்திமா சாஹிபா கூறுகிறார். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவருக்கு உண்மையான நிம்மதி கிடைத்தது. நான் எனது இறுதி மூச்சு உள்ளவரை அஹ்மதிய்யத்தில் நிலைத்து நிற்பேன் என்று உறுதி கூறுகிறேன் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஐவரிகோஸ்டின் ஒரு புதிதாக பைஅத் செய்த நண்பர் தோரே அலூலி எழுதுகிறார். பைஅத் செய்த பிறகு அவரது ஆன்மீகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. இது தவிர அஹ்மதிய்யத்தின் அறிவு சார் வார்த்தைகள் மூலம் எனது அறிவும் ஞானமும் கூடியது.

பிறகு கினிகனாகரின் முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகிறார். ஒரு நண்பர் ஸிலா சாஹிப் நமது பிரச்சார நிலையத்திற்கு வந்தார். வந்த நோக்கம் அவரது ஊரில் ஒரு பள்ளி கட்டுவதற்காக அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் உதவி கேட்டு வாங்குவதாக இருந்தது. கூறுகிறார். அவருக்கு ஜமாஅத்தின் அறிமுகம் செய்யப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட் மஸீஹ் (அலை) அவர்களுடைய வருகையைப் பற்றி கூறப்பட்டது. நீண்ட அமர்விற்குப் பிறகு அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார். கூறினார். நீங்கள் எனது கண்களை திறந்து விட்டீர்கள். நீங்கள் எங்கள் ஊருக்கு வர வேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும். அதன் மூலம் தூதுச் செய்தி எல்லா மக்களிடமும் சென்று சேர வேண்டும். இந்த வகையில் திட்டமிட்ட ஏற்பாட்டின் கீழ் அந்த ஊருக்கு சென்றனர். அல்லாஹ்வின் அருளால் அந்த கிராமம் முழுவதும் அதன் சுற்றுப் புறத்திலுள்ள ஐந்து கிராமங்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர்.

இந்த நண்பர் ஸிலா கூறுகிறார். நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட் மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததில் இருந்து என்னிடம் ஓர் ஆன்மீக மாற்றம் ஏற்பட்டது. அதனை இதற்கு முன்னர் ஒருபோதும் உணர்ந்ததில்லை.

அல் ஜஸாயிரின் ஒரு நண்பர் தமது குடும்பத்தில் அஹ்மதிய்யத் நுழைந்தது பற்றி எழுதுகிறார். ஏனெனில் அவரது தாய் கனவில் பார்த்தார். ஒரு பெரியவர் அவரது வீட்டுக்கு வந்துள்ளார். அவர் பிள்ளைகளுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனையை தருகிறார். இதனால் அவரது வீட்டில் நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது. அவ்வீட்டில் இவர் மீது நல்ல பற்று ஏற்பட்டுள்ளது.

அவரது தாயார் எழுதுகிறார். அவரது மகள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தாள். பல்வேறு ஸ்டேஷன்களை மாற்றிக் கொண்டிருந்த போது திடீரென mta வில் சென்று நின்று விட்டது. அப்போது எனது நிழற்படம் MTA வில் வந்து கொண்டிருந்தது. அதனைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கூறத் தொடங்கினார். இந்த மனிதரை நான் கனவில் பார்த்துள்ளேன். அதற்குப்பின் அவர் தொடர்ந்து mta பார்க்கத் தொடங்கினார். இவ்வாறு அவர் 2013 ல் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்

பிறகு கினிகனாகரியின் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் எழுதுகிறார்.

கனாகரிகேபிடலில் இருந்து 200 கிலோ மீட்டர் தூரத்தில் சோமியோயாவி ஒரு பெரும் ஊர் ஆகும். அல்லாஹ்வின் அருளால் இவ்வருடம் தொடர்ந்து தொடர்பு கொண்டதன் முயற்சியின் காரணமாக முழு ஊரும், பல கிராமங்களும் அஹ்மதியாகி விட்டனர். கூறுகிறார். இத்தனை பெரிய எண்ணிக்கையை கவனத்திற் கொண்டவாறு முறைப்படி ஒரு ஜமாஅத்தை நிறுவிட வேண்டும் என்று நான் எண்ணியிருந்தேன். அங்கு நான் சென்றதும் அம்மக்கள் முதலிலேயே எதிர்பார்த்து இருந்தனர். அவர்களுள் ஜாமியா மஸ்ஜிதின் இமாமும் இருந்தார். அவர் பைஅத் செய்து ஜமாஅத்தில் சேர்ந்து விட்டிருந்தார். நாங்கள் அவரிடம் சொன்னோம். முறைப்படி ஒரு ஜமாஅத்தை நிலைநாட்ட விரும்புகிறோம். கிராமத்தின் சீஃப் சொன்னார். எங்கள் பொருள் வசதி வாய்ப்புகள் அனைத்தையும் தருகிறோம். இந்த பெரிய மஸ்ஜிதும் இந்த ஊரும் உங்களுடையது.

மேலும் கூறினார். நாங்கள் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு எங்களுடைய வாழ்நாளிலேயே மிக மிக விலை மதிப்புமிக்க ஒன்றை வெற்று விட்டோம். எமது கண்கள் திறந்து விட்டன. உண்மையான இஸ்லாத்தின் முகம் எங்களுக்கு தென்படுகிறது.

நமது ஹாபிஸ் மஹ்மூத் சாஹிப் இத்தாலியை சார்ந்தவர். அவர் கபாபீரின் LIVE Telecast ஆக mta வில் ஒளிபரப்பக்கூடிய நிகழ்ச்சியை பார்த்து விட்டு நான் 6 மாதத்திற்கு முன்பே உள்ளத்தால் பைஅத் செய்து விட்டேன். இறைவன் அதற்கு சாட்சி. ஆனால் இப்போது வரை பாரத்தை நிரப்பி அனுப்பி வைக்கவில்லை. நான் தன்னந்தனியாக இருக்கிறேன். நான் உண்மையை உணர்ந்தது கொண்டதற்காக எனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. நான் உண்மையை உணர்ந்து கொண்டேன். இமாம் மஹ்தியின் உண்மைக்கு நானே ஒரு சாட்சியாவேன். அது எவ்வாறெனில் 2008 ஆம் ஆண்டில் ஒருமுறை நான் திடீரென்டு mta பார்த்தேன். நாஸிக் மன்சூக் பற்றி ஓர் உரையாடல் நடந்து கொண்டிருந்தது. அப்போது உங்களைப் பற்றியோ ஹஸ்ரத் இமாம் மஹ்தி பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. நிகழ்ச்சி நன்றாக இருந்தது. பார்த்துக் கொண்டே இருந்தேன். அதற்கு பின் ஜின்களைப் பற்றி உண்மை நிலை குறித்து அல்ஹிவாருல் முபாஷிர் என்ற நிகழ்ச்சி பார்த்தேன். அந்த நிகழ்ச்சி மூலமாகவே நான் ஜமாஅத்தின் உண்மை நிலை குறித்து உணர்ந்தேன். ஒப்புக் கொண்டேன். பிறகு அது தொடர்ந்தது. பிறகு 2013 ல் 6 மாதங்களுக்கு முன் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தேன். ஹஸ்ரத் மஸீஹின் சிலுவை மரணத்திலிருந்து விடுதலை மற்றும் அவரது இயற்கை மரணம் குறித்து ஒரு நிகழ்ச்சி பார்த்ததில் எந்த அளவுக்கு மன திருப்தி ஏற்பட்டது என்றால் என்னால் பைஅத் செய்யாமல் இருக்க முடியவில்லை. இந்த நிகழ்ச்சியின் மூலம் எனது பைஅத்தை அறிவிக்கின்றேன் என்று கூறுகிறார்.

பிறகு அல் ஜஸாயிரிலிருந்து அப்துல் ஹகீம் சாஹிப் கூறுகிறார்.1990 களில் Civil Defence Squard ல் சேர்ந்தேன். ஏனென்றால் நாட்டில் இஸ்லாம் மார்க்கத்தின் பெயரால் தீவிரவாதம் பரவிக் கொண்டிருந்தது. மக்களை கொன்று பொருள்களை சூரையாடிக் கொண்டிருந்தனர். தீவிரவாதிகள் அனைவரின் நிலையும் இதுதான். இஸ்லாத்தின் பெயரால் அவர்கள் வேலை செய்கின்றார்கள்.

கூறுகிறார். எங்களது பழைய நண்பர் அப்பாஸ் சாஹிப் அப்போது அஹ்மதியாகி இருந்தார். எனக்கு தெரியாது. ஒருமுறை அவர் என்னை சந்தித்த போது பல்வேறு விஷயங்கள் குறித்து பேசினார். திருக்குர்ஆனின் பல விரிவுரைகளை வழங்கினார். அதனை முதலில் ஒருபோதும் கேட்டதில்லை. அறிவுக்கு சரியாக பொருந்தக் கூடியதாக இருந்தது. உள்ளம் அது கேட்டு நிம்மதி அடைந்தது. உடனே அப்போதே நான் பைஅத் படிவத்தை நிரப்பினேன். ஜமாஅத்தில் இணைந்து விட்டேன். அதற்கு சில நாள் முன்பு நான் கனவில் பார்த்தேன். நான் இருள் நிறைந்த மைதானத்தில் இரவில் சென்று கொண்டிருந்தேன். ஒரு பெரியவர் தென்படுகிறார். எனது கையை பிடித்து செல்கிறார். ஒரு கடற்கரையை அடைகிறோம். அங்கு ஒரு கப்பல் நிற்கிறது. அங்கு இன்னொரு மனிதர் நிற்கிறார். அவர் எங்களை எதிர்பார்த்து நிற்பதாக தோன்றுகிறது. மூன்று பேரும் அதில் ஏறுகிறோம். நான் உள்ளத்தில் நினைக்கிறேன். இவர்கள் யார்? என்னை கூட்டி வந்த பெரியவர் கூறுகிறார். நான் ரஸூலுல்லாஹ் ஆவேன். இவர் மஸீஹ் மஹ்தி மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆவார்கள். பிறகு அந்த கப்பல் கடலில் சென்று ஒரு கடலில் உள்ள கப்பலை சென்றடைகிறது. இருவரும் என்னைப் பார்த்து இந்த கப்பலில் ஏறிவிடு. அந்த கப்பலில் இருப்பவர்களுடன் சேர்ந்து கொள். அவர்கள் தான் உமது உண்மையான குடும்பத்தவர்கள்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வார்த்தைகளும் மக்களின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அப்துல் அஸீஸ் சாஹிப் என்ற மராக்கஷை சார்ந்தவர் கூறுகிறார். நான் வரலாறு மற்றும் புவியியல் ஆசிரியன். எனக்கு இறைவன் பெரும் நிஃமத்துகள் வழங்கியிருந்தும் கூட நான் நப்ஸின் இருள்களில் இருந்தேன். பாவத்தில் வீழ்ந்து வந்தேன். எனக்கு இறைவன் பைஅத்திற்கு தவ்ஃபீக் தந்து விட்டான். நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய நூல்களை வாசிக்கத் தொடங்கினேன். எனது ஞானங்களுக்கான மருந்தும், ஆன்மாவின் சிகிச்சையும் அதுதான் என்று உணர்ந்தேன். எனக்கு உளத்தூய்மை பற்றி கவலை எழுந்தது. இறைவன் என்னை உண்மையாளர்களோடு எழுத வேண்டும் என்று ஹுஸூர் அன்வருக்கு துஆவிற்காக எழுத வேண்டும் என்ற விழிப்புணர்வு வந்தது.

பிறகு ஜப்பானில் இருந்து நமது ஜமாஅத்தின் தலைவர் எழுதுகிறார். ஜமாஅத்தில் ஷஹாதத்துகள் நடக்கின்றன. அதற்கு பதிலாக அல்லாஹ் ஜமாஅத்துக்கு எவ்வளவு உதவி ஒத்தாசைகளை வழங்குகிறான்.

கூறுகிறார். ஷேகுபூராவில் கலீல் அஹ்மது சாஹிப் ஷஹீதாக்கப்பட்டார். குத்பாவில் நான் அதனை குறிப்பிட்ட போது 6 மாதமாக ஜமாஅத்துடன் தொடர்பு வைத்திருந்த ஜப்பானிய நண்பரிடமிருந்து போன் வந்தது. அவருக்கு தப்லீக் செய்யப்பட்டிருந்தது. நான் அஹ்மதியாக விரும்புகிறேன் என்று அவர் கூறினார். நான் அவரை பள்ளிக்கு அழைத்தேன். பைஅத்துக்கான நடவடிக்கைகளை செய்தேன். அவர் ஷஹாதத் பற்றி விபரத்தை கேட்டுவிட்டு அதன் பிறகு பைஅத் செய்தார். அல்லாஹ்வின் அருளால் பொருள் தியாகத்தின் திட்டத்திலும் பங்கு பெற்றார்.

யாத்கீரின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள். யாத்கீர் நகரின் ஓர் இளைஞர் மஞ்சுநாத். இவர் இந்து மதத்தை சார்ந்தவர். Bsc படித்துக் கொண்டிருந்தார். நமது ஒரு காதிம் அவருடன் படித்தார். நமது காதிமிடமிருந்து நோட்ஸ் எழுதுவதற்காக நோட்புக் தேவைப்பட்டது. அவர் நமது காதிமின் நோட்டை வாங்கிச் சென்றார். அதில் மனித நேயம் வாழ்க. எல்லாருடனும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்து அவரது உள்ளத்தில் கணிசமான தாக்கம் ஏற்பட்டது. இக்காலத்தில் எந்த அளவுக்கு அமைதியின்மை பரவியுள்ளது. இதனைவிட அன்புக்குரிய தூது வேறு இருக்க முடியாது. இந்த முழக்கம் அவர் உள்ளத்தில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. மேற்கொண்டு விபரங்களை தெரிந்து கொள்வதற்காக அம்மனிதர் நமது காதிமை தொடர்பு கொண்டார். அவருக்கு ஜமாஅத்தின் பல வெளியீடுகள்

தரப்பட்டன. ஆழ்ந்த வாசிப்புக்குப் பிறகு அவருக்கு தெரிய வந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு உண்மையான ஜமாஅத். அமைதியை நிலைநாட்டவும், மனித நேயத்திற்கு தொண்டு செய்யவும் அளவற்ற முயற்சி செய்து வருகிறது. ஜமாஅத் பற்றி கணிசமாக தெரிந்த பிறகு அவரது உள்ளத்துக்கு அமைதி கிடைத்தது. மார்ச் 2014 ல் பைஅத் செய்து விட்டார்.

அஹ்மதிகளிடம் வெறும் முழக்கமல்ல. செயலும் தப்லீக்கிற்கு ஒரு வழியாக அமையுமளவுக்கு இருக்க வேண்டும். நான் பலமுறை முன்னரும் கூறி விட்டேன். எனவே வெறும் போதனையை கூறுவதால் தாக்கம் ஏற்படாது. உண்மையான செயலையும் பார்க்கும் போது மக்களிடம் கவனம் பிறக்கும். எனவே பெரும் பொறுப்பு ஒவ்வொரு அஹ்மதிக்கும் உண்டு.

எகிப்தில் இருந்து ஒரு நண்பர் மஹ்மூது சாஹிப் எழுதுகிறார்.

இறைவன் மீது ஆணை. இறைவன் மீது ஆணை. நீங்கள் உண்மையில் இருக்கிறீர்கள். அந்தோ முழு உலகமும் உங்களை பின்பற்ற வேண்டுமே? அல்ஹம்துலில்லாஹ். எமது தந்தையார் பைஅத் செய்தார். பிறகு சகோதரர் பிறகு தாயார் பிறகு நான் பைஅத் செய்தேன். பிறகு எனது கஸின் பிறகு எனது தந்தையின் கஸின் பைஅத் செய்தனர்.

எவ்வாறிருப்பினும் எண்ணற்ற சம்பவங்களில் இருந்து சில சம்பவங்களை எடுத்துள்ளேன். இவற்றை எப்போதும் அறிக்கைகளில் பார்க்கிறேன். எவ்வாறு அல்லாஹ் தனது அடையாளங்களை காட்டுகிறான். எவ்வாறு மக்களுக்கு கனவுகள் மூலம் வழிகாட்டுகிறான். எவ்வாறு எதிரிகளின் எதிர்ப்புகள் கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது நல்லியல்பு கொண்ட மக்களின் உள்ளங்களை திருப்புகின்றனான் ? எவ்வாறு கிறித்தவ பாதிரி கூட இஸ்லாத்தின் ஒருமைத்தன்மையை ஒப்புக் கொள்கிறார். எவ்வாறு அறிவு ஞானத்தில் மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவாறு முன்னேறுகின்றனர் ? எவ்வாறு தமது செயல் நிலையில் வளர்ச்சியின் கவனம் ஏற்படுகிறது ? இந்த அனைத்து விஷயங்களும் ஏதாவது ஒரு மனிதனின் முயற்சியின் விளைவா ? இல்லை. மாறாக, இவை அனைத்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சார்பாக இறைவனது உதவி ஒத்தாசைகளை எடுத்து வைக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய உண்மைக்கான நிரூபணங்கள் ஆகும்.

ஆகவே நாம் புதிதாக வந்தவர்களின் சம்பவங்களைக் கேட்டு நமது ஈமானின் முன்னேற்றத்திற்கு துஆ செய்யுமிடத்து முஸ்லிம் உம்மத்திற்காகவும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை தருவானாக. அவர்கள் இக்காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு உலகையும் மறுமையையும் சுதாரிப்பார்களாக.

இப்போது முஸ்லிம் உலகின் நிலை கருணை காட்டத்தக்கது. தலைவர்கள் மக்கள் மீது அநீதி இழைக்கின்றனர். மக்கள் நீதியின் வழிகாட்டல் கிடைக்காத காரணத்தால் தலைவர்களுக்கு எதிராக சண்டையிடுகின்றனர். ஒவ்வொரு சுயநலமிகளும் தலைவர்களாகி தமக்கென்று ஒரு கூட்டத்தாரை ஏற்படுத்திக் கொண்டு அமர்ந்துள்ளனர். பல்வேறு பிரிவுகள் ஒருவர் மற்றவரின் கழுத்தை வெட்ட முயன்று கொண்டிருக்கின்றனர்.

ஏன் இந்த கடைசி நபியை ஏற்றுக் கொண்டவர்களிடம் இந்த குழப்பங்கள் கிளர்ச்சிகள் ? வளர்ச்சியின் முகட்டை அடைந்த பிறகு வீழ்ச்சியின் பட்டனத்தில் கிட்டத்தட்ட எல்லா முஸ்லிம் நாடுகளும் விழுகின்றனவே ஏன் ? என்று யோசிப்பதில்லை. இந்த வீழ்ச்சியிலிருந்து தப்பவும், முன்னேற்றத்தின் இலக்கிற்கும் செல்வதற்கும் ஒரே வழிதான். அது இறைவன் கூறியத. பின்னவர்களை முன்னவர்களோடு இணைக்கின்ற அந்த மஸீஹ் மஹூதை நம்புங்கள். பிரிவினைகளுக்கு பதில் ஓர் உம்மத் ஆகி மஸீஹ் மவ்வூது அவர்களின் கையில் ஒன்று கூடுங்கள். அல்லாஹ் நமக்கு இதற்கு வாய்ப்பு தருவானாக. இதற்காக நாம் மிகவும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கும் இதற்காக துஆ செய்ய வாய்ப்பு வழங்குவானாக. அதனை ஒப்புக் கொள்வானாக.

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கண்ணியத்திற்குரிய இன்திஸார் அஹ்மது அயாஸ் சாஹிப் அவர்களுடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். இவர் டாக்டர் இஃதிகார் அஹ்மது அயாஸ் சாஹிபின் மகன். இவர் 28 மார்ச் 2015 தமது 50 வது வயதில் பாஸ்டன் அமெரிக்காவில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மேலும் அவர்கள் செய்த தொண்டையும் எடுத்துக் கூறினார்கள்.

இரண்டவாது ஜனாஸா காயிப் ஜனாப் வஸீம் அஹ்மது அவர்களுடையதாகும். காதியான் ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர் உடையது ஆகும். 25 மார்ச் 2015 அன்று பியாஸ் நதியில் மூழ்கி இறந்து விட்டார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவரது வயது 20 ஆகும். நான்கு நாட்கள் தொடர்ந்து தேடுதலுக்குப் பிறகு உடல் கிடைத்தது. போஸ்ட்மார்ட்டம் மற்றும் சட்டபூர்வ நடவடிக்கைக்குப் பிறகு ஜனாஸா தொழ வைக்கப்பட்டு பஹிஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஹுஸூர் அவர்கள் மர்ஹூம்களின் மக்ஃபிரத்திற்காகவும் அவர்களுடைய தகுதி உயர்வதற்காகவும் துஆ செய்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 03.04.15
Tamil Translation : Muallim M.Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516